தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: புரட்டாசி 16உ திங்கள் (1—10—56) ★ ★ வெளியூர்: புரட்டாசி 17உ செவ்வாய் (2—10—56) [இதழ் 96

விசைத்தறியால் வரும் கேடு!

2கோடி நெசவாளர் பிழைப்பில் மண் விழுந்துவிடும்

'அரிசி அரைவை மில்களைப்புகுத்தியதால்கைக்குத்தல் அரிசி மறைந்துபோனது போலத்தான், மில்களைக் காட்டிலும் கைத்தறிகளுக்கு விசைத்தறிகள் மிகவும் ஆபத்தானதாகும். கிராமங்களிலுள்ள 2 கோடி கைத்தறி நெசவாளர்களின் பிழைப்பில் அது மண்ணைவிழச் செய்யும்"

என்று அகில இந்திய கைத்தறி போர்டு மெம்பர் சோமய்யா திருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

மாவீரர் சாமிக்கு இறுதி அஞ்சலி

தமிழகம் எங்கணும் துக்கக் கோலம்

தலைநகரில் என்றும் கண்டறியாத மௌன ஊர்வலம்

ஐம்பதினாயிரம் மக்களுக்கு மேல் அணிவகுத்து வந்த காட்சி

இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் திரண்டிருந்து அனுதாபம் தெரிவித்தனர்

" திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழு—செயற்குழு உறுப்பினரும், திருநெல்வேலி மாவட்டச் செயலாளரும், தூத்துக்குடி நகரசபை உறுப்பினரும், பல தொழிற்சங்கங்களுக்குத் தலைவரும், அண்ணா அவர்களின் அருமைத் தம்பிமார்களில் ஒருவருமான தூத்துக்குடித் தோழர் கே. வி. கே. சாமி அவர்கள், மனிதப் பண்பற்ற ... யவர்கள்ளால் வெட்டப்பட்டுக் கொலையுண்டு நம்மை ... நேர்ந்தமைக்கு, இக்கூட்டம், அவரின் பிரிவால் வருந்து—அவரது குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் இயக்கத் தோழர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது."

30—9—56 மாலை 7 மணியளவில், சென்னை—வண்ணை கல்லறை மைதானத்தில், தோழர் கே. வி. கே. சாமி அவர்களின் மறைவு குறித்து அனுதாபம் தெரிவித்து நடைபெற்ற ஒரு இலட்சம் மக்களுக்கு அதிகமாக அடங்கியிருந்த பொதுக்கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் படித்து நிறைவேற்றப்பட்டது.

கூடியிருந்த மூதாட்டிகள், முதியோர்கள், மாணவ மாணவிகள், இயக்கத் தோழர்கள், மாற்றுக்கட்சியினர், தொழிலாளர்கள், அனுதாபிகள் ஆகிய எல்லோருமே தீர்மானத்தைப் படித்தவுடன், இரண்டு நிமிடங்கள் மௌனமாக இருந்த காட்சி இதுவரை கண்டறியாததாக—மாற்றார் பார்த்திராததாக இருந்தது. ஆம், இதுவரை சென்னையில் எந்த அரசியல் தலைவனுக்கும் மக்கள் காட்டிய மதிப்பை எல்லாம் மிஞ்சிவிட்டது என்றேகூற வேண்டும்.

மௌன ஊர்வலம்

அன்று பகல் 3 மணிக்கு, சென்னை ரேப்பியர் பூங்கா அருகாமையில், மக்கள் சாரை சாரையாக வந்து குவிந்தவண்ணமிருந்தனர். சென்னையிலுள்ள எல்லா கிளைக் கழகத் தோழர்களும், வேதனை உள்ளத்தோடும் வாடிய முகத்துடனும் கோதாத தலையுடனும் சோகக் கண்களோடும், பேசாத ஊமைகளாகத் தெம்பில்லா நடைபோட்டுக்கொண்டு, மறைந்த மயல் வீரர் சாமியின் மௌன ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். சோகத்தின் சின்னமாக அவர்களின் மார்புகளில் கருப்புச் சின்னங்கள் அணிந்திருந்தனர். அந்தத் தூத்துக்குடித் தங்கத்தின் மறைவுக்கு அந்தச் சின்னம் போதாது என்றோ என்னவோ, ஒரு சிலர் கருப்பு உடைகளையே அணிந்து வந்தனர்!

குறித்த நேரத்தில் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வந்து சேர்ந்தார். கூடியிருந்த மக்கள் அணிவகுத்து நின்றிருப்பதைக் கண்டார். அவரும், மற்ற இயக்க முன்னணி வீரர்களும் முன்னால் அணிவகுத்து நிற்க, சோகம் ததும்பச் செய்யும் 'பாண்டு' வாத்தியம் முழங்கியது. எல்லோரும் ஒழுங்காக அணிவகுத்து நின்றனர். இருந்தும் ஊர்வலம் புறப்படவில்லை. அந்த நேரத்தில் 500 ஜெஜத்திற்கு அப்பால் 50 அடி உயரத்தில் ஓர் கருப்புக்கொடியுடன் சென்னை ஜார்ஜ் டவுனில் இருந்து தோழர் துரைக் கண்ணன் தலைமையில் ஒரு பெருங் கூட்டமும், மேலும் பல பகுதிகளில் இருந்து தோழர்களின் வருகையும் பெருகிக்கொண்டேயிருந்தது. எந்தப் பக்கம் பார்த்தாலும் கருப்பு மயம்! இருந்தும் ஊர்வலம் புறப்படவில்லை

(4-ம் பக்கம் பார்க்க)

கொடி உயர்த்தப்பட்டது

தோழர் கே. வி. கே. சாமி அவர்களின் பிரிவின் காரணமாக ஏற்பட்ட துக்கத்தின் அறிகுறியாக 21—9—56-ம் நாளிலிருந்து 30—9—56-ம் நாள் வரையில் கழகக் கொடிக் கம்பத்தில் தாழ்த்தி வைக்கப்பட்டிருந்த தி. மு. கழகக் கொடி வழக்கம்போல் இன்று உயர்த்திப் பறக்கவிடப்பட்டது.

தூத்துக்குடி நிலைமை

மூவர் சரண்; ஒருவர் கைது

(டிரங்க் டெலிபோன் செய்தி)

சென்னை, அக். 1—போலீசாரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் F. I. R.-ல் குறிப்பிடப்பட்டுள்ளவர்களில்காளி, ஆத்தி, பொன்னுச்சாமி ஆகியோர் ஸ்ரீவைகுண்டம் சப்-மாஜிஸ்திரேட் முன்னால் சரணடைந்தனர்.

செகநாதன் என்பவரை தூத்துக்குடியிலேயே 29-ந் தேதியன்று போலீசார் கைது செய்திருக்கின்றனர்.

F. I. R.-ல் குறிப்பிடப்பட்டுள்ளவர்களில் பெருமாள் என்பவர் மட்டும் இன்னும் பிடிபடாமல் தலைமறைவாக இருக்கிறார்.

போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அவர்களின் உத்தரவுப்படி விசேட துப்பறியும் நிபுணர்கள் தூத்துக்குடிக்கு வந்து கொலையைப் பற்றி துப்பறிகின்றனர்.

போலீசார் இந்த வழக்கில் மிகத் தீவிரமான நடவடிக்கைகள் எடுத்து வருவதாகத் தெரியவருகிறது.

கல்லறைக்குமுன் அண்ணாவின் கண்ணீர்ப் பெருக்கம்

தனயனை இழந்த தந்தையாருக்கு ஆறுதல் மொழி

தூத்துக்குடியில் தென்பாண்டி மண்டலம் திரண்டெழுந்து காட்டிய அனுதாபம்

சென்னையிலிருந்து 29—9—56 பிற்பகல் தூத்துக்குடிக்குப் புறப்பட்ட அறிஞர் அண்ணா, துணைப்பொதுச்செயலாளர் என். வி. நடராசன் ஆகியோர் அன்று இரவு மதுரையில் தங்கியிருந்து, மறுநாள் 30—9—56 காலை 10-30 மணிக்கு, மதுரை மாவட்டச் செயலாளரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான தோழர் எஸ். முத்து அவர்களும் உடன்வர தூத்துக்குடிக்குப் பயணமானார்கள்.

பிற்பகல் 2 மணிக்கு, தூத்துக்குடி நகர எல்லை அடைந்தபோது அங்கே துக்கக் கோலத்துடன் அணிவகுத்து நின்றிருந்த ஆயிரக்கணக்கான தோழர்களுடன் தூத்துக்குடி நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஜோசப் அவர்கள், அண்ணா, என். வி. நடராசன், முத்து ஆகியோரை கலங்கும் கண்களுடன்—ஈடு செய்ய முடியாத ஒன்றை இழந்துவிட்ட பரிதாபத் தோற்றத்துடன் வரவேற்ற காட்சி—திக்குத் திசை தெரியாத காட்டில் செய்வதறியாது நெடுநாட்கள் திகைத்து நின்ற சேய்கள் திடீரெனத் தோற்றமளித்தத் தங்களது ஆசைத் தாயைக் காணும்போது பாய்ந்தோடி அணைத்துக்கொள்ளத் துடித்து நிற்கும் காட்சியாக இருந்தது.

அந்தத் தோழர்களின் துக்கத்தைத் தானும் பகிர்ந்து, இருள் மண்டிக் கிடக்கும் வீட்டில் நுழைவது போன்ற நிலையில் அண்ணா அவர்களும் மற்றவர்களும் தூத்துக்குடி நகருள் நுழைந்தனர்.

தூத்துக்குடி தோழர் எஸ். ஓ. வெற்றிவேல் அவர்கள் இல்லத்தில் அண்ணா அவர்களும் ஏனையோரும் சிறிது நேரம் தங்கியிருந்து, 3-30 மணியளவில் தோழர் சாமி வசித்த வீட்டிற்குச் சென்றனர்!

மறைந்த வீரர் சாமி அவர்களின் தந்தையார்—தனயனைப் பிரிந்து தாங்கொணாத் துயரில் மூழ்கிக் கிடக்கும் முதியவர், அண்ணா அவர்களைக் கண்டதும் இறுக அணைத்துக் 'கோ'வெனக் கதறியழுதார். நாட்டையே கதறியழவிட்ட தன்னுடைய ஆசை மகன்—தனக்கு எவ்வளவு ஆறாத்துயரத்தை ஏற்படுத்திப் பிரிந்துவிட்டார் என்பதைச் சொல்லி அந்தப் பெரியவர் உகுத்த கண்ணீர் ஆறுதல் சொல்லித் தேற்றுவது அவ்வளவு சுலபமானதல்ல என்று சொல்லும்படியாக வழிந்தது.

"நீங்கள் பெற்று வளர்த்த பிள்ளை—எங்களுடன் இரண்டறக் கலந்து தொண்டாற்றிய என் தம்பி போய்விட்டார்; ஆனால், நான் இருக்கிறேன். என்னை உங்கள் அன்பு மகன் சாமியாகப் பாவியுங்கள். உங்கள் மகன் சாமிக்குப் பதிலாக அவருக்கு மூத்த அண்ணா

(4-ம் பக்கம் பார்க்க)

அரிய வாய்ப்பு

புதுடில்லி, செப். 29—நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டத்தைச் சேர்ந்த இரண்டு திறமைவாய்ந்த எஞ்சினியர்களுக்கு அரிய வாய்ப்பு கிடைத்துள்ளது. மேல்நாடுகளில், நிலக்கரி பற்றிய புதிய தொழில் நுட்பங்களைக் குறித்துத் தெரிந்துகொள்ள அமெரிக்கத் தொழில் நுட்பக் குழு உதவியளிக்க முன் வந்துள்ளது; அந்த எஞ்சினியர்கள் அமெரிக்காவுக்கும், மேற்கு ஜெர்மனிக்கும் செல்வார்கள்.

தஞ்சை ஏ. வி. பதி வெட்டப்பட்டார்

(டிரங்க் டெலிபோன் செய்தி)

தஞ்சைமாவட்ட தி.மு.க. பொருளாளரும், தஞ்சை நகராட்சி மன்ற உறுப்பினருமான தோழர் ஏ.வி. பதி அவர்கள் 30-9-56 இரவு 9-15 மணிக்கு, அவர் தஞ்சைக் கீழ்வாசலில் தம் கடையில் இருந்தபோது, ஆயுதம் தாங்கிய எதிரிகள் அவரைத் தலையிலும், வயிற்றிலும் வெட்டிவிட்டு ஓடிவிட்டனர்.

தோழர் ஏ. வி. பதி தஞ்சை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். உயிருக்கு ஆபத்து இல்லை என்று தகவல் தரப்பட்டிருக்கிறது.

செய்தி கேள்விப்பட்டதும் தஞ்சை மாவட்டச் செயலாளர் என். எஸ். இளங்கோ அவர்கள் தஞ்சைக்கு விரைந்து, தோழர் பதியுடன் இருந்து வருகிறார்.

இதன் தொடர்பில் போலீசார் மூவரைக் கைது செய்திருப்பதாகத் தெரியவருகிறது. சந்தேகப்பட்ட மேலும் சிலரைப் போலீசார் தேடிவருகின்றனர்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 1—10—'56 திங்கள்

அதிகாரமில்லாத சேவகம்

தென்னாட்டை வடநாடு ஆதிக்கம் செலுத்துகிறது; அதனால் தென்னாட்டில் வளம் குறைந்து வாட்டம் மிகுதியாகிறது என நாம் கூறிக் குமுறும் பொழுதெல்லாம், நமது கூற்றில் உள்ள உண்மையை மறைமுகமாகத் தாங்கள் ஒப்புக்கொண்ட போதிலும், மறுத்துத் தீரவேண்டிய கட்டாயத்திற்காகக் கனம் காமராசர் வகையறுக்கள், கனல் கக்க நோக்கி, நம்மீது சுடுசொல் வீசுகின்றனர். வடநாடு தென்னாட்டை ஆதிக்கம் செலுத்துகிறது எனக் கூறுவது எல்லாம் வெறும் பொய்; நக்கீரன் பரம்பரையில் வந்ததாகக் கூறுகிறவர்கள் வடநாட்டினரைக் கண்டு அச்சங்கொள்வது ஆகுமா?—அடுக்குமா? — அவ்வாறு தங்களைத் தாழ்த்திக் [கொ]ள்வது மானக்கேடல்லவா? [எ]னச் சொல்லலங்காரம் [செய்யு]ம் கனம் காமராசர் கூட்[டத்தா]ர் முன்வந்து விடுகின்ற [...]

[ந]மது குற்றச்சாட்டை வடிகட்டின பொய் எனக் கூறிவிடுவதாலும், போலி வீரம் காட்டிப் பிதற்றிவிடுவதாலும், தென்னாட்டின்மீது வடநாடு செலுத்திவரும் ஆதிக்கத்தை மறைத்துவிடவும் முடியாது—இல்லாது செய்துவிடவும் இயலாது. அவ்வாறு சொல்லுகின்ற நேரம்வரையில், பிரத்தியட்ச நிலைமையிலிருந்துத் தங்களைத் துண்டித்துக்கொள்ளுகிறோம்; மற்ற சிலரையும் அவ்வுண்மை நிலையை மறந்து இருக்கச் செய்கிறோம் என்ற சாதாரண திருப்தியைத் தவிர கனம் காமராசர் போன்றவர்களின் ஏமாற்றுப் பேச்சில் வேறு எதுவும் உள்ளடங்கி இருக்கவில்லை.

தென்னாடு வடநாட்டினால் எந்த அளவு அடிமைப்படுத்தப் பட்டிருக்கின்றது என்பதை உணர்ந்துகொள்ளுவதற்குக் கனம் காமராசருக்குக்கிடைத்த குறிப்பிடத்தகுந்த ஏமாற்றம் ஒன்றே போதுமான சான்றாகும்.

அதாவது, தமிழ்நாட்டு மக்களின் மூல உணவுப் பொருளான அரிசி, தமிழகத்தில், தமிழ் மக்கள் அனைவரும் வயிறார உண்ணும் அளவிற்கு விளைவது கிடையாது. முதலாண்டுத் திட்டம் முடிவடைந்த பின்னரும் தமிழ்நாட்டில் நெல் விளைச்சல் மிகுதியாகவில்லை.

உள்நாட்டுத் தேவையையே ஈடுசெய்ய முடியாத அளவில் [உ]ணவுப் பொருள் உற்பத்தியில் தமிழ் நாடு பின்தங்கிக் கிடக்கும் நிலையில், இங்கிருந்து உணவுப் பொருளை—அதாவது அரிசியை, பம்பாய் வர்த்தகர்களும், உபரி விளைச்சலைக் கொண்ட உத்திர பிரதேச வியாபாரிகளும் தங்கள் தங்கள் பகுதிகளுக்குக் கடத்திச் செல்வதில் முனைந்துள்ளனர். இதன் பலனாகப் பற்றாக்குறையாக உள்ள அரிசி, இங்கு விலை ஏற ஆரம்பித்துவிட்டது.

மூல உணவுப் பொருளான அரிசி விலை இங்கு, ஏறுவதைத் தடுத்து நிறுத்தவேண்டுமானால், பிற மாகாணத்தவர் கடத்திச் செல்வதற்குத் தடை விதிப்பது முதற்கண் மேற்கொள்ள வேண்டிய பணியாகும். அந்த உண்மையை உணர்ந்து மாகாணத்தின் முதலமைச்சராக இருக்கிறோம் என்ற நினைப்பில், மாகாணத்தைவிட்டு அரிசி ஏற்றுமதி செய்யப்படுவதைத் தடை போட்டு நிறுத்தப் போவதாகக் கனம் காமராசர் கொக்கரித்தார். காமராசரின் மாவீரங்கண்டு மக்களும் மகிழ்ந்தனர்.

ஆனால், முதலமைச்சர் காமராசர் வெட்கத்தால் தலை கவிழ்ந்து போன சோகக் காட்சியைத்தான், நாட்டு மக்கள் காணக்கூடியவர் ஆயினர்.

மாகாணத்தை விட்டு அரிசியைக் கடத்திச் செல்லக் கூடாது என சென்னை மாகாணத்திற்கு மட்டும் சலுகை காட்ட இந்தியப் பேரரசால் முடியாது — முடியவே முடியாது என டில்லி ஆதிபத்தியம், சுடச் சுட, காமராசர் கோரிக்கைக்குப் பதில் கொடுத்துவிட்டது. பச்சைத் தமிழர் வழக்கம் போல் வாயடைத்துக் கிடக்கிறார்!

இம்மாகாண மக்களின் தேவைக்கே போதாது இருக்கும் அரிசியை, பிறமாகாணத்தவர் கடத்திச் செல்லுவதைத் தடுப்பதற்கும் அதிகாரமில்லாது, கண்களில் நீர்வழிய அந்த அக்கிரமத்தைத் தாங்கிக் கொண்டு பெயரளவிற்கு ஆட்சியாளர்களாக இருக்கின்ற அவலநிலை அளவுடன் தான், தென்னாட்டின்மீது வடநாடு செலுத்திவரும் ஆதிக்கம் முற்றுப்பெற்று வருகிறது எனச் சொல்லி விடுவதற்கு மில்லை. அந்த ஆதிக்கம் அதற்கு மேலும் செல்லுகிறது.

தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சியில் இந்தியப் பேரரசு ஓரவஞ்சனையாக நடந்து கொண்டு வருகிறது என்ற உண்மை மறுக்க முடியாததாக இருப்பதுடன், பரவலாகவும் இருந்து வருகிறது என்பதை அனைவரும் அறிவர். தமிழ் நாட்டின் தொழில் அபிவிருத்தியில் இந்தியப் பேரரசு அக்கரை காட்டாததைக்கூட மறந்து விடலாம் — மன்னித்துவிடலாம். ஆனால், இங்கு ஏற்கனவே வளர்ந்துள்ள தொழில்களின் மூலம் கிடைக்கக்கூடிய நலன்களை, தன் தேவைக்கேற்ப பயன் படுத்திக்கொள்வதற்குக் கூட தமிழ் நாட்டிற்கு வாய்ப்பளிக்காது, தமிழ்நாட்டைத் தன் பத்திற்குள்ளாக்குவதிலும் இந்தியப் பேரரசு, தன்னிடமுள்ள ஆதிக்க அதிகாரத்தைச் செலுத்திவரும் அக்கிரமம் மறந்துவிடக்கூடியதன்று — மன்னித்துவிடக்கூடியதுமாகாது.

இம்மாகாணத்தில் இயங்கி வரும் மூன்று சிமெண்ட் தொழிற்சாலைகளும், இம்மாகாணத்தின் மாதத் தேவைக்குக் கொஞ்சம் அதிகமாகவே சிமெண்டை உற்பத்திச்செய்து வருகின்றன. அதாவது, இம்மாகாணத்திற்கு, 45,000 டன் சிமெண்டு மாதத் தேவையாக இருக்கும் பொழுது, மூன்று ஆலைகளும் சராசரியாக மாதம் 59,170 டன் சிமெண்டை உற்பத்திச்செய்து வருகின்றன. மாகாணத்தின் தேவையைக் காட்டிலும் மிகுதியாக இம்மாகாணத்தில் சிமெண்டு உற்பத்திச் செய்யப் பட்டு வந்தபோதிலும், இம் மாகாணம் சிமெண்டு பற்றாக் குறையில் அவதிப்பட்டுக் கொண்டு இருக்கிறது என்பது வேதனைதரும் விசித்திரமாகும்.

இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலும் சமத்துவமாகச் சிமெண்டை பகிர்ந்தளிப்பது என்ற போர்வையில், இங்கு மிகுதியாக உற்பத்தியாகும் சிமெண்டை, இந்தியப் பேரரசு ஆக்கிரமித்துக் கொண்டு, தேவைக்குக் குறைவான சிமெண்டை இம்மாகாணத்திற்கு வழங்கிவருகிறது அப் பேரரசு.

இந்த சிமெண்டு பற்றாக் குறையால் இம்மாகாண மக்கள் மட்டுமே அல்லலுக்கு உள்ளாகிறார்கள் என்பதில்லை.

இம்மாகாண அரசாங்கமும் சிமெண்டு பற்றாக்குறையால் திண்டாடுகிறது என்று மராமத்து அமைச்சர் சட்டசபையில் வெளிப்படையாக மாரடித்து அழுது இருக்கிறார்.

இங்கு உற்பத்தியாகும் சிமெண்டை கடத்திச் செல்ல வேண்டாம் என இந்தியப் பேரரசிற்கு விண்ணப்பித்துக் கொண்டது அனைத்தும், செவிடன் காதில் ஊதிய சங்காயிற்று என்றும் தழதழத்தக் குரலில், அம்மந்திரியார் ஒப்பாரி வைத்துள்ளார்.

இம்மாகாணத்தின் தேவைக்கு அதிகமாகவே இங்குள்ள மூன்று ஆலைகளில் சிமெண்டு உற்பத்திச் செய்யப்பட்டு வருகிறது. ஆனால் அதை உபயோகப்படுத்திக் கொள்வதற்கான அதிகாரம், இந்த மாகாண காங்கிரஸ் ஆட்சியாளர்களுக்கு இல்லை—அறவே இல்லை.

மிகுதியாக உற்பத்தியாகும் சிமெண்டை தம் விருப்பம் போல் கடத்திச் செல்லவும், தம் விருப்பம்போல் உற்பத்திச் செய்யும் மாகாணத்தவருக்குக் குறைவாகக் கொடுக்கவும், இந்தியப் பேரரசிற்கு அதிகாரம் இருக்கிறது.

இதைப் பார்த்துக்கொண்டு இருக்க, இம்முறையை நியாயமானது என வாதிட, இம் மாகாணத்திலும் பெயரளவில் ஒரு ஆட்சி செயல்பட்டு வருகிறது! இந்த ஆட்சியில் கனம் காமராசர் முதலமைச்சராக இருந்து வருகிறார்!

தென்னாட்டின் மீது வடநாடு ஆதிக்கம் செலுத்தி வருகிறதா இல்லையா என்பதை முடிவு கட்டிக்கொள்ளும் பொறுப்பை வாசகர்களுக்கே விட்டுவிடுகிறோம். அப்பொறுப்பில் பச்சைத் தமிழருக்குக்கூட பங்கு உண்டு என்பதை நாமும் ஒப்புக்கொள்ளுகிறோம், அதிகாரமில்லாத சேவகம் இதுதான்!

மைசூர் 'இராசப் பிரமுகர்' கவர்னராகிறார்?

பெங்களூர், செப். 29—புதிதாக அமைக்கப்படவிருக்கும் மைசூர் மாநிலத்திற்குத் தற்போது மைசூருக்கு இராசப் பிரமுகராக உள்ளவரையே புதிய கவர்னராக நியமிப்பதென இந்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

சிமெண்டு பற்றுக் குறையின் சோகக் கதை!

மக்கள் துன்புறுவது போன்றே அரசாங்கமும் அல்லல் படுகிறதாம்!

சிமெண்ட் பங்கீட்டை உயர்த்தக் கோரியும் பயன்கிட்டவில்லையாம்!

மத்திய அரசாங்கத்திடம் எடுத்த காவடிகள் வீணாயினவாம்!

சிமெண்ட் துறையில் இந்திய[ப்] பேரரசு செலுத்தும் ஆதிக்கத்தின்விளைவுபற்றி அமைச்சர் சேதுபதி முகாரி

"மகுடமில்லாத மகுடாதிபதியே! மண்டலமில்லாத மண்டலாதிபதியே! அதிகாரமில்லாத அமைச்சரே[றே]!

"விடுகட்ட, பணிமனை அமைக்க, அரைகுறையாகக் கிடக்கும் கட்டிடத்தைக் கட்டிமுடிக்க சிமெண்ட் கிடைக்கவில்லையே! எங்கள் அல்லல் அதிகமாகிறது! தொல்லையைத் தவிர்க்க வழி காணுங்கள்! துன்பத்தைத் துடைக்க உடனடியாக ஏற்பாடு செய்யுங்கள்!"

இப்படி சட்டசபையில், மராமத்துத் துறையை கண்காணித்துவரும் அமைச்சர் இராமநாதபுரம் அரசர் இராசேசுவர சேதுபதி அவர்களிடம் முறையிட்டுக்கொண்டார், பொதுசனப் பிரதிநிதியாக அவையில் அமர்ந்திருக்கும் கனம் உறுப்பினர் ஒருவர்!

"பொதுமக்கள் மட்டுமே சிமெண்டு கிடைக்காது திண்டாடுகின்றனர் என எண்ணிடாதீர்—எங்கள் அரசாங்கமும்தான் அந்தப் பற்றுக்குறையால் அவதியுறுகிறது என்ற உண்மையை உணர்ந்து கொள்ளுங்கள்!

"மாகாணத்தின் தேவைக்கு அதிகமாகவே இங்குள்ள மூன்று தொழிற்சாலைகளிலும் சிமெண்டு உற்பத்தியான போதிலும், மாகாணத்தின் உத்தேசமாகத் தேவையான மொத்த சிமெண்டில் 15,000 டன் குறைத்தே இம்மாகாணத்திற்கு மத்திய அரசாங்கம் சிமெண்டு ஒதுக்கி இருக்கிறது.

"வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சிமெண்டின் விநியோகத்தைக் கொண்டு, இம்மாகாணத்தின் சிமெண்டுத் தேவையை நிரப்ப முடியும் என[...]கிறேன்.

"இம்மாகாணத்திற்கு அளித்துள்ள சிமெண்டு பங்கீட்டின் அளவைக் கூட்டும்படி, மத்திய அரசாங்கத்தை நாங்கள் கேட்டோம்; ஆனால் அந்தக் கோரிக்கை இப்பொழுதும் கோரிக்கை உருவில்தான் இருந்து வருகிறது.

"இம்மாகாணத்தில் உற்பத்தி செய்யப்பட்டு வரும் சிமெண்டு இந்திய யூனியனில் உள்ள பிற மாகாணங்களுக்கும், இந்தியப் பேரரசின் வெளிநாட்டுக் கொள்கையின் காரணமாகப் பிற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப் பட்டு வருகின்றது என்ற சேதியையும், கனம் உறுப்பினர் தெரிந்து கொள்ளவேண்டும்!"

அமைச்சர் சேதுபதி தந்துள்ளார், இந்த அருமையான பதிலை!

அவர் மேலும் கூறியிருப்பதாவது:—

"டால்மியாபுரம், மதுக்கரை, தாழையூத்து ஆகிய மூன்று இடங்களில் உள்ள தொழிற்சாலைகளின் மொத்த சிமெண்டு உற்பத்தி மதிப்பு மாதம் ஒன்றுக்கு 55,400 டன்களாகும்; ஆனால், அத் தொழிற்சாலைகள் மூன்றும் சராசரியாக மாதம் ஒன்றுக்கு 59,170 டன்கள் முழு அளவில் சிமெண்டு உற்பத்தி செய்துவருகின்றன.

"அகில இந்திய ரீதியில் சிமெண்டு மீது கட்டுப்பாடு விதித்து, தனது தேவையையும் மற்ற மாகாணங்களின் தேவையையும் சமத்துவமாக ஈடுசெய்ய, நாட்டின் மொத்த சிமெண்ட் உற்பத்தியையும் தானே எடுத்துக்கொள்ளுகிறது.

"அகில இந்திய ரீதியில் சிமெண்டின் விலையை வரையறை செய்வதும், அவ்விலையில் அடிக்கடி மாற்றம் காண்பதும் இந்தியப் பேரரசின் கையிலேயே இருக்கிறது.

"அதன் விநியோகமும் இந்தியப்பேரரசின் பொறுப்பிலேயே இருக்கிறது.

"சிமெண்டு பற்றுக்குறைக்கு முதன்மையானதும் மூல காரணமாக இருந்துவருவதும், இம் மாகாணத்தின் தேவைக்குக் குறைவாக இந்தியப் பேரரசு சிமெண்டுப் பங்கிடு செய்திருப்பதே காரணமாகும். இம்மாகாணத்திற்கு மாதம் ஒன்று ஏறத்தாழ 45,000 டன் சிமெண்டு தேவையாகிறது.

"இம்மாகாணத்திற்கு இந்தியப் பேரரசால் ஒதுக்கப்பட்டிருக்கும் சிமெண்டின் அளவோ 30,500 டன்களாகும்.

"ஓராண்டுக்காலமாக இந்நிலை இருந்துவருகிறது.

"இம்மாகாணத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள சிமெண்டுஅளவைப் பெருக்கவேண்டும் என்று இந்தியப் பேரரசிடம் பல முறை கோரப்பட்டது; ஆனால் அந்த வேண்டுகோள்கள் இன்னமும் நிறைவேற்றப்படாமலே இருக்கின்றன."

"அதுவுமன்றி, தென்பகுதி ரயில்வேயில் அனுசரிக்கப்பட்டு வரும் போக்கு-வரத்து முறை, சிமெண்டு விநியோகத்திற்கு பெருந்தடையாக இருக்கிறது. இத்தடையை நீக்கவேண்டும் என, இந்தியப் பேரரசு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது; இக் கோரிக்கை அதன் ஆய்வில் இருந்து வருகிறது.

"இந்திய யூனியனில் உள்ள மற்ற மாகாணங்களுக்கும், இந்தியப் பேரரசின் வெளிநாட்டுக் கொள்கையின் காரணமாக வெளிநாடுகளுக்கும் சிமெண்ட் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றது.

"குறிப்பிட்ட காலம் வரை இம் மாகாணத்திலிருந்து சிமெண்டு ஏற்றுமதி செய்யப்படுவதைத் தவிர்க்க வேண்டும் என இந்தியப் பேரரசிற்கு சிபாரிசு செய்யப் பட்டது. அச்சிபாரிசு ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

(8-ம் பக்கம் பார்க்க)

'தடைகளையெல்லாம் கடந்து நாட்டுப் பணியாற்றினர் சாமி'

'தன்னலம்கருதா தியாகியின் மறைவு தி. மு. கழகத்திற்குப் பெரியதோர் இழப்பு'

ஏ.வி.பி.ஆசைத்தம்பி சோக உரை

சென்னை, செப் 28—

"தொல்லைகளையெல்லாம் கடந்து இலட்சியத்தை நோக்கி முன் சென்று, இடர் தந்த தடைக்க[ற்] களையெல்லாம் தூக்கியெறிந்[து] விட்டு நாட்டுக்குச் சேவை செ[ய்] தவர் நமது அருமை நண்[பர்] கே. வி. கே. சாமி அவர்கள்.

"அருமை நண்பர் சாமி மறை[ந்து] விட்டார்; என்றாலும், சாமி[யின்] பெயர் நம் உள்ளங்களிலே [வாழ்] கிறது.

"எவரையும் புகழாத பெரி[யார்] இராமசாமி அவர்களே, [தூத்] துக்குடியில் நடைபெ[ற்ற] மாநாட்டின்போது அ[வரைப்] பாராட்டி, 'வருங்கால '[...] —ஜெனரல்' என்று [...] வழங்கினர். அவர் இப்[...] வெறும் புகழ்ச்சிக்காக[...] [...]ல்லை; சாமியின்[...]டைய[...] [...]யும், நெஞ்சுறு[தியு]ம், [...]தயும் சமரிக்கும்[...]லை [...]ண்ட பெரியார் [...]விட் [...]சான்[...] வா[...]கள். [...]யும் [...]ழாத[...]யார் [...] வ[...] அவ [...]டும் [...]விற்கு [...]வீர[...] திகழ்ந் [...]

[...]ப்ணு[...]வர், கழ[...] [...]பொது[...]ழ கூடு [...]ல் அ[...]—செயற் [...]கிற[...] என்றால் [...]ப்படி' [...]யக்கப்பணி [...]யா[...] அ[...] நினைக்க நினைக்[க] மனம் [...]வதனையடை கிறது. 'தேர்த[...]ழு தூத்துக் குடிக்கு எப்ப[...]ு வருகிறது' என்று எங்க[...]ப் பார்த்துக் கேட்டதும் '[...]இன்று வருகி றோம்' என்று [கூ]றின நாங்கள், இப்போது [...]லும் அவரை எங்கே பார்[...]?'

'[தி]ராவிட [மு]ன்னேற்றக் கழகத் [...] அ[...]ாரத்திலே சாமி [அ]வர்களின் உழைப்பு அதிகம் [...]ண்டு [தி]ராவிட முன்னேற்றக் [கழ]கம் [...]ரித்தியங்கப் பணம் [...]ன்ற உ[...]ன், முதன் முதலில் [தூத்துக்கு]டியில் அண்ணா அவர் [...]க்[...]ண்டு நாடகம் நடத்தி [ரூ] 5,0[...] வசூலித்துக்கொடுத்த [உ]ழைப்[ப]ாளி. கட்சி என்றதும் [...] உழைப்பும் தந்து, [போ]ராட்டம் என்றதும் பின் [வாங்கா]மல் ஊரையும் ஆட்களை [...]படுத்தி வளர்த்தவர்; [...] கட்சி சும்மா இருக்கக் [கூடா]து—நல்ல முறையில் [...]கவேண்டும்—சுறுசுறுப் [...]ப் பணியாற்ற வேண்டும் எ[ன்]ற எண்ணம்கொண்டு அய[ரா]து உழைத்தவர் சாமி.

[...]யாமை— ஆத்திரம் ஆகிய [...]ப்படிப்பட்ட பண்புகளை [அ]றவே ஒழித்து, கண்ணியம்— [க]ட்டுப்பாடு—கடமை ஆகியவ [ற்]றை மனதிலே கொள்வதின் மூலம் மாவீரன் கே. வி. கே. சாமி அவர்களை என்றென்றும் [ம]னதில் நிறுத்திக்கொள்வோம்"

என்று 28-9-56-ல், சென்னை—[மீ]ர்சாகிப்பேட்டையில்நடைபெற்ற [தி]. மு. கழகக் கூட்டத்தில் பேசு [கை]யில், தோழர் ஏ. வி. பி. [ஆ]சைத்தம்பி அவர்கள் குறிப்பிட் [டா]ர்.

[...]றந்த மாவீரன் கே. வி. கே. சாமிக்கு [...]ழர்களின் இறுதி மரியாதை

நாடெங்கிலுமுள்ள நமது கழகத் தோழர்களும் அனுதாபிகளும் தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் மறைவுக்கு அனுதாபம் தெரி வித்து நிறைவேற்றிய தீர்மானங்கள் முதலியன இங்கு சுருக்கித்தரப் பட்டுள்ளன :—

[...]த்தூர் ([...]நாதபுரம் மா.):

[...]9—56 மாலை அனுதாப ஊர்வலம் நடைபெற்று [...] பார்க் வந்ததும் நடை[பெற்ற]க் கூட்டத்தில் தோழர்கள் சொற்பொழிவாற்றி அனுதா[பம்] தெரிவித்தனர். கூட்டத்தில் [...]கட்சித் தோழர்களும் கலந்து [கொ]ண்டனர்.

[இ]ராமச்சந்திரபுரம்:

22—9—56ல் கழகக் கொடிகள் [அ]னைத்தும் தாழப் பறக்கவிடப் [பட்]டன. மாலை 6 மணிக்கு கழகப் [ப]ணிமனையில் இருந்து மௌன ஊர்வலம் நடைபெற்றது. பின் னர் நடைபெற்றக் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற் றப்பட்டது.

மரமடக்கி:

தி. மு. கழகக் கட்டிடத்தில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத் தில் அனைவரும் மௌனமாக எழுந்துநின்று மரியாதை செலுத்தி அனுதாபம் தெரிவித்துக்கொள் ளபபட்டது.

அகரம்.(நெல்லைமாவட்டம்)

தோழர் சாமி அவர்களின் மறைவு கேட்டதும், கழகக் கொடி கள் அனைத்தும் தாழப் பறக்க விடப்பட்டன. தோழர்கள் பலர் தூத்துக்குடி சென்று தங்கள் இறுதி மரியாதையைச் செலுத்தி னர். 23-ந் தேதியன்று இரவு 8 மணிக்கு நடைபெற்றக் கூட்டத் தில் அனுதாபத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

அம்மையப்பன்:

22—9—56ல் நடைபெற்ற கழக உறுப்பினர்களின் அவசரக் கூட்டத்தில் அனுதாபத் தீர்மா னம் நிறைவேற்றப்பட்டது.

கட்டிமேடு:

தோழர் சாமி அவர்களின் மறைவு கேட்டதும் கழகக் கொடி கள் அனைத்தும் பாதிக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டு அனுதாபம் தெரி வித்துக் கொள்ளப்பட்டது.

திருச்செந்தூர்:

24—9—56-ல் தோழர் கண பதி தலைமையில் அனுதாபப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினபின் அனுதாபத் தீர்மானம் நிறைவேற் றப்பட்டது.

வில்லோனி எஸ்டேட்:

23—9—56ல் வால்பாறை வட் டம் வில்லோனி எஸ்டேட் கழகத் தில் நடைபெற்ற; கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துத் தீர்மா னம் நிறைவேற்றப்பட்டது.

கடமங்குடி:

25—9—56 இரவு 8 மணிக்கு நடைபெற்ற கழக உறுப்பினர் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நல்லூர்:

22—9—56 இரவு 7 மணிக்கு நடைபெற்ற; கழக உறுப்பினர் கூட்டத்தில், அனுதாபத் தீர்மா னம் நிறைவேற்றப்பட்டது. 24-9-56—ல் நல்லூர் கழகத் தோழர்களும் அனுதாபிகளும் நெசவாளர்களும் வேலைக்குச் செல் லாமலும், கடைகளை மூடியும் அனு தாபம் தெரிவித்துக் கொண்டனர்.

* * *

காவேரிபுரம் ஆலை, கைத்தறித் துணி வியாபாரியான திரு. கே. ஆர். அப்புசாமி அவர்கள் தோழர் சாமி அவர்களின் மறைவு குறித் துத் தமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துக்கொள்கிறார்.

கொமாரசாமிபட்டி—சேலம்:

23-9-56 மாலை 6 மணிக்கு நடைபெற்ற திராவிட நாடு பிரி வினைநாள் கூட்டத்தில் அனுதா பத் தீர்மானம் நிறைவேற்றப்பட் டது. தோழர்கள் பலர் சொற் பொழிவாற்றினர்.

திருப்பாலக்குடி:

24—9—56 இரவு 8 மணிக்கு நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், 5 நிமிட நேரம் மௌனம் மேற்கொள்ளப்பட்டு இறுதி மரியாதை தெரிவிக்கப்பட் டதுடன், அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அனவரதநல்லூர்:

24—9—56ல் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட் டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஏனங்குடி:

25—9—56-ல் நடைபெற்றக் கழக உறுப்பினர் கூட்டத்தில், அனுதாபத் தீர்மானம் நிறைவேற் றப்பட்டது.

ஆனைமலை:

25—9—56 இரவு 8 மணிக்கு நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மல்லசமுத்திரம்:

23—9—56-ல் நடைபெற்றக் கூட்டத்தில் இரண்டு நிமிடநேரம் மௌனமாக இருந்து அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

பர்மா:

23—9—56 மாலை 5½ மணிக்கு பர்மா திராவிட முன்னேற்றக் கழக இல்லத்தில் தோழர் வி. சுப் பிரமணி தலைமையில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடை பெற்றுக் கொண்டிருந்தபோது, பத்திரிகை வாயிலாகத் தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் படு கொலை செய்யப்பட்ட சேதி அறி விக்கப்பட்டது. உடனே, கூட் டத்தில் ஆய்வுக்கு எடுத்துக்கொள் ளப்பட்ட நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒத்திவைக்கப்பட்டு, அனுதாபக் கூட்டம் நடத்தப்பட்டது. பொது உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து சில நிமிட நேரம் மௌன மாக நின்று தங்கள் ஆழ்ந்த அனு தாபத்தையும் இறுதி மரியாதை யையும் தெரிவித்தனர். பின்னர், தோழர் சாமி அவர்களின் மறைவு குறித்து ஆழ்ந்த அனுதாபம் தெரி வித்துத் தீர்மானம் ஒன்று நிறை வேற்றப்பட்டது.

வல்லம்படுகை:

23—9—56 மாலை நடைபெற்ற அனுதாபப் பொதுக்கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற் றப்பட்டது.

திருக்கோட்டியூர்:

22—9—56 காலை தோழர் ந. பெ. பாலு தலைமையில் அனுதாப மௌன ஊர்வலம் நடைபெற்றது.

கம்பம்(மதுரைமாவட்டம்):

நகரில் பறந்து கொண்டிருந்த கழகக் கொடிகள் தாழப் பறக்க விடப்பட்டன. 21ம் தேதியன்று காலை 10மணிக்கு தோழர்கள் அனை வரும் கருப்புச் சின்னம் அணிந்து கார்நிமதி நிலையத்திலிருந்து மௌன ஊர்வலமாகச் சென்று வ. உ. சி திடலில் அனுதாபக் கூட்டம் நடத்தித் தீர்மானமும் நிறைவேற்றினர்.

மேலக்கற்கண்டார்கோட்டை (பொன்மலை)

24—9—56 மாலை 6 மணிக்கு, திரு. வி. க திடலில் நடைபெற்ற திராவிட நாடு விடுதலை நாள் விழாக் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அனைவரும் இரண்டு நிமிட நேரம் மௌனமாக இருந்து இறுதி மரி யாதையைச் செலுத்தினர் தோழர் கள் கி. மனோகரன், அம்பில்-தர்ம லிங்கம், மதிவாணன் ஆகியோர் தோழர் சாமி மறைவுக்கு அனுதா பம் தெரிவித்துப் பேசினர்.

கொத்தமங்கலம்

26—9—56 இரவு 9 மணிக்கு நடைபெற்ற கிளைக் கழகச் செயற் குழுக் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

போத்தனூர்

24—9—56 மாலை 6 மணிக்கு நடைபெற்ற கிளைக் கழகச் செயற் குழுக் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மதுரை—பொன்னகரம்:

23—9—56 பகல் 11 மணிக்கு நடைபெற்ற பகுத்தறிவுப் படிப்பக உறுப்பினர் கூட்டத்தில், அனு தாபத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது

கொழும்பு:

23—9—56ல் கொழும்பு செம் பட்டா தெரு, எண் 140 அண்ணா பகுத்தறிவு மன்றப் பணிமனையில் தோழர் டி. வி. நடராசன் தலைமை யில் அனுதாபக் கூட்டம் நடை பெற்றது. தோழர்கள் பலர் சொற் பொழிவாற்றினர். இறுதியில் அனுதாபத் தீர்மானமும் நிறை வேற்றப்பட்டது.

சென்னை மீர்சாகிப்பேட்டையில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

கே. வி. கே. சாமியின் மறைவுக்கு அனுதாபம்

28—9—56 மாலை 6-30 மணியளவில் சென்னை—மீர்சாகிப் பேட்டை இராமாராவ் தோட்டத்தில், 43-வது வட்ட தி. மு. க. கிளையின் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது; கே. வி. கே. சாமியின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப் பட்டது.

கூட்டத்திற்குத் தோழர் ஈ. கே. புகழேந்தி தலைமை தாங்கி னார்.

தோழர்கள் மு. அரங்கநாதன், நடிகமணி டி. வி. நாராயண சாமி ஆகியோர் தோழர் சாமி அவர்களின் பொதுநலத் தொண்டு கள்—குறிப்பாகத் திராவிட முன் னேற்றக் கழகத்திற்கு அவர் ஆற்றிய சிறப்புமிகு பணிகள் ஆகியவை குறித்தும், தளராத உள்ளமும், சலியா ஆர்வமும் படைத்த அவரது இழப்பு தி மு. கழகத்திற்கும் தமிழகத்திற்கும் பெரும் இழப்பாகும் என்ற கருத் துப்பட சிறிது நேரம் சொற் பொழிவாற்றினர்.

இறுதியில் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் சுமார் ஒரு மணிநேரம் தோழர் சாமி அவர்களின் மறைவு குறித்துத் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து உரையாற்றினர்.

இரவு 8-30 மணியளவில், தோழர் மு. புரட்சிமணி நன்றி நவில, கூட்டம் இனிது முடிவுற் றது. கூட்டத்தில் திரளான மக் கள் கூடியிருந்தனர்.

[...]டிவீரன்பட்டி:

[...] [...]—9—56-ல், கிளைக் கழகத் [...]ந்து மௌன ஊர்வலம் [ந]டைபெற்று முடிவுற்றது. அனு [தா]பம் தெரிவித்துக்கொள்ளப்பட் [ட]து.

வெள்ளரிப்பட்டி:

கழகக் கொடிகள் அனைத்தும் [...]ப் பறக்கவிடப்பட்டன. 22-ந் [தே]தியன்று நடைபெற்ற அனுதா[பக் கூ]ட்டத்தில் தீர்மானம் நிறை [வேற்றப்]பட்டது.

'கலையுள்ளம் [...] கர்ம வீரனை [...] இழந்துவிட்டோம்'

'பாட்டாளி மக்களின் சக்திகளைத் திரட்டிப் பாடுபட்ட உழைப்பாளி'

நடிகமணி நாராயணசாமி இரங்கற் பேச்சு

சென்னை, செப். 28—

"மாவீரன் கே. வி. கே. சாமி மெல்லிய இதயம் படைத்தவர்; நல்ல கலையுள்ளம் கொண்டவர்; அந்தக் கர்மவீரனை இழந்த செய்தியைக் கேட்டபோது என் னால் கலங்காமல் இருக்க முடிய வில்லை.

"மனிதரிலே ஒரு சிலர்தான் மாணிக்கமாகத் திகழ்கின்றனர்; அப்படிப்பட்டவர்களிலே ஒருவ ராகத் திகழ்ந்தார் சாமி. அவ ரைச் சுற்றிலும்எப்போதும் குடி சையில் வாழும் தோழர்களைப் பார்க்கலாம்—பாட்டாளி மக்க ளைப் பார்க்கலாம்—அதே நேரத் தில் பெரியவர்களையும் பார்க்க லாம். அப்படிப்பட்ட வகையில் பாட்டாளி மக்களை ஒன்று கூட்டி, அவர்களது சக்திகளை எல்லாம் திராவிட முன்னேற்றக் கழக வளர்ச்சிக்குப் பயன் படுத்தித், திராவிட முன்னேற் றக் கழகம் பாட்டாளி, தொழி லாளிகளுக்காகப் பாடுபடும் இயக்கம் என்ற உண்மையை அவர்கள் மனதிலே பதியச் செய்தார் தோழர் சாமி.

"நமது இயக்கம் பாட்டாளி களின் பாசறை என்று நாம் கூறினோம்—கூறி வருகிறோம். ஆனால், அது உண்மை என்ப தைச் செயல்ரீதியில் செய்து காட்டி மெய்ப்பித்த செயல் வீரன் நமது தோழர் சாமி.

"அவரைப் போன்று நாட்டு மக்களுக்கு உண்மையாக உழைத்து, கொள்கையில் வெற்றி காண்பதே நாம் அவ ருக்குச் செய்யும் மரியாதை யாகும்."

என்று, 28—9—56-ல், சென்னை—மீர்சாகிப் பேட்டையில் நடை பெற்ற தி. மு. கழகக் கூட்டத்தில் தோழர் டி. வி. நாராயணசாமி அவர்கள் குறிப்பிட்டார்.

மு. அரங்கசாமி

"தோழர் சாமி அவர்கள் கொண்ட கொள்கை—இலட்சிய மான திராவிட நாடு விடுதலைக் காக, அவர் விட்டுச் சென்ற பணி யைத் தொடர்ந்து புது முறுக் கேற்றி, வீரத்தோடு பணியாற்ற நம்மைத் தயார் செய்துகொள்ள வேண்டும்."

கூட்டத்தில், தோழர் சாமி அவர்களின் பிரிவுக்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. (ச. கி.)

எழுமலை (மதுரை மா.)

23—9—56 மாலை 4 மணிக்கு தோழர் கு. பரமசிவம் தலைமையில் ஊர்வலம் புறப்பட்டுக் கொடி மைதானத்தை அடைந்ததும் நடை பெற்றப் பொதுக்கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற் றப்பட்டது.

பொன்னம்மாபேட்டை

24—9—56 இரவு 9 மணிக்கு, தோழர் பி. கே. மன்னர் தலைமை யில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், அனு தாபத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

சிமெண்டு...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"மேற்குறிப்பிட்ட உண்மை கள்தான், இம்மாகாணத் தின் சிமெண்டுப் பற்றாக் குறைக்குக் காரணமாகும். இதன் விளைவாகத் தங்களுக் குத் தேவைப்படும் அள விற்கு சிமெண்டைப் பெறு வதில் அரசாங்கத் [...] களும் பொதுமக்க[ளு]ம் [...] கடப்படுகிறார்கள்."

தலைநகரில் என்றும் கண்டறியாத மௌன ஊர்வலம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஏனோ — பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் காலெடுத்தும் வைக்கவில்லை; கழகத் தோழர்களுக்குக் கட்டளையும் இடவில்லை. அவர் எதையோ எதிர்பார்த்து ஏங்கி நின்று கொண்டிருந்தார்.

ஆம்! அவர் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தது அவர் கண்களுக்குக் காட்சியளித்தது. அண்ணாவின் மேற்பார்வையில், ஓவியர் பழனி அவர்கள் அருமையாகத் தீட்டிய சாமியின் உருவப் படம்; அதற்குப் பின்புறம், தி. மு. கழகக் கொடி விருப்பபதைப்போல அமைத்து, கருப்பு மாலை அணிவிக்கப்பட்டு, சாமியின் உருவப்படம் கூட்டத்தை நோக்கி வந்தவண்ணமிருந்தது. கூடியிருந்த அத்தனை பேருமே அந்த ஒப்பற்ற வீரனின் உயிரோவியத்தை ஒரே நேரத்தில் கண்ணீர் வடித்து வரவேற்ற காட்சி, ஒப்பற்றது — இல்லை, இல்லை; கழகத்தினர் காட்டும் அனுதாபத்திற்கும் மரியாதைக்கும் நல்லதோர் திலகமாகும். பின்னர், மௌன ஊர்வலம் புறப்பட்டது— கோஷமில்லை, ஆடம்பரமில்லை; ஆனால் அமைதியிருந்தது.

கருப்பு உடையணிந்த கழகத் தோழர் கழகக் கொடி ஏந்தி முன் செல்ல, கருப்புக் கொடிகளுடன் கழகத் தோழர்கள் சைக்கிள்களில், இருவர் பின் இருவராக அணிவகுத்துப் புறப்பட்டனர். சுமார் 1,000 சைக்கிள்கள் முன் செல்ல, மௌன ஊர்வலம் புறப்பட்டது.

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர்கள் மு. கருணாநிதி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, தோழியர் அலமேலு-அப்பாதுரை, காஞ்சி-மணிமொழியார், டி. வி. நாராயணசாமி, டி. கே. பொன்னுவேலு, தோழியர் சத்தியவாணி-முத்து ஆகியோர் அடுத்து அணிவகுத்துச் செல்ல, இயக்கத் தோழர்கள் மறைந்த செல்வம் சாமியின் உயிரோவியத்தைப்பின் தொடர்ந்தனர்.

இயக்கப்பற்றுக்கொண்ட பல பொதுமக்களும் சாமியின் உயிரோவியத்திற்குக் கருப்பு மாலை அணிவித்து அஞ்சலி செய்து ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

திருவல்லிக்கேணி முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சிறுமிகள் சிறுவர்கள்கூடக் கலந்துகொண்டு 'சாமியைப் பறிகொடுத்தோமே' என்ற ஏக்கத்துடன் நடைபோட்டனர். ஊர்வலம் சிந்தாதிரிப்பேட்டை வழியாக ரிப்பன் கட்டிடம் வந்தடைந்தது. மௌன ஊர்வலம் செல்லும்வரை சிந்தாதிரிப்பேட்டை இரயில் கேட் ... முடியாததால் மின்சார இரயில்கள் போக முடியாமல் நின்றன. பஸ்கள், கார்கள் எல்லாம் அரை மணி நேரத்திற்குமேல் சாலையின் ஓரமாக நிறுத்தப்பட்டன. இந்த இடத்தில் ஊர்வலம் ஒரு மைல் நீளம் இருக்கும்.

சாமியின் உயிரோவியம் நகராட்சி மன்றக் கட்டிடத்தின் (ரிப்பன் கட்டிடம்) முன்புள்ள மறைந்த நீதிக்கட்சித் தலைவர் தியாகராயர் சிலைக்கு அருகில் வந்ததும், 'ரிப்பன்' கட்டிட உச்சியிலுள்ள கடியாரத்தின் மணி ஓசைகள், நான்குமுறை முழங்கின.

பின்னர் ஊர்வலம் ஜெனரல் பஜார் வழியாக வரும்போது, பெரிய போலீஸ் அதிகாரிகள் உட்படப் பல அதிகாரிகள் போக்குவரத்துக்கு இடையூறநேராதவாறு கண்காணித்து வந்தனர். அவர்கள் எல்லாம்கூட எதும் பேசாது, அமைதியாகச் சிறு நடைபோட்டு ஊர்வலத்துடன் வந்தது குறிப்பிடத்தக்கது.

ஊர்வலம் சென்ற பாதையின் இருபுறங்களிலும் இலட்சக்கணக்கான மக்கள் மதிற்சுவர்கள் மீது அமர்ந்து, ஊர்வலத்தை எதிர் நோக்கியிருந்தனர்.

ஊர்வலம் பிராட்வே வழியாகத் திரும்பியதும், 11-வது வட்டத் ...ழர்கள் இடையிடையே கருப்பு ...தாரணங்களைக் கட்டி, பொது ...ர்துகொள்ளும் வகையில் பல சுவரொட்டிகளை ஏற்பாடு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

ஆங்காங்கு சாமியின் படங்கள் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தன. ஊர்வலம் வடசென்னைக்கு வந்ததும், பல இடங்களிலே சாமியின் உயிரோவியத்திற்குக் கருப்பு மாலை அணிவித்து மக்கள் இறுதி வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டனர். இளங்கோ கலைமன்றம், அண்ணா படிப்பகம், திருவள்ளுவர் முன்னேற்றக் கழகம், 3, 4, 5-வது வட்ட தி. மு. கழகக் கிளைகள் சார்பில், சாலைகளின் கூட்டு இடங்களில், 'தென்பாண்டிக் கடல் முத்தே எங்கள் அஞ்சலி', 'கொள்கையே கடமையாகக்கொண்ட காவலனே எங்கள் வணக்கம்', 'மாசில்லா மாணிக்கமே, தூத்துக்குடித் தங்கமே, எம்மைவிட்டுப் பிரிந்தனையோ' என்றெல்லாம் பலர் பார்த்துப் புரிந்துகொள்ளும்படி எழுதப்பட்டிருந்தன.

இறுதியில் ஊர்வலம் 7 மணிக்குக் கல்லறை மைதானத்தை வந்து அடைந்தது; ஊர்வலம் வருவதற்கு முன்னர் ஏற்கனவே அங்கு பல லாயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர்.

ஊர்வலம் அமைதியாக வந்ததும், தலைவர்கள் மேடைக்கு வந்தனர் — சாமியின் உயிரோவியம் மேடைக்கு அருகில் நிறுத்திவைக்கப்பட்டது.

அனுதாபக் கூட்டம்

அனுதாபப் பொதுக்கூட்டம் நடைபெற்றக் கல்லறை மைதானத்தின் ஒரு பக்கத்தில் மேடை; அந்த மேடையில் சோகம் ததும்பும் இயக்க முன்னணித் தலைவர்கள்; மேடைக்கு அருகில் மறைந்த மாவீரன் கே. வி. கே. சாமி அவர்களின் உருவப் படம் மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தது. அந்தப் படத்தைப் பார்த்தவுடன் கூட்டத்தில் பலர் துயரக்கடலில் மூழ்கினர். அந்த ஒப்பற்ற ஓவியத்தை இரவு பகல் என்று பாராது, உயிரோவியமாகத் தீட்டித்தந்த தோழர் பழனி அவர்களின் திறமைக்கு ஒரு அளவுகோல், அந்த ஓவியத்தைக் கண்டதும் மக்கள் வெள்ளம் கண்ணீர் விட்டதேயாகும்!

தோழர் கே. எம். கண்ணபிரான் முன்மொழிய, சிதம்பரம் வட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் பொன் - சொக்கலிங்கம் வழிமொழிய முன்னாள் சென்னை மாவட்டச் செயலாளர் தோழர் கே. கோவிந்தசாமி அவர்கள், கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

தோழர்கள் காஞ்சி - மணிமொழியார், என். சிவரத்தினம், கா. அப்பாதுரை, டி வி. நாராயணசாமி, தோழியர் சத்தியவாணி முத்து, எஸ். எஸ். இராசேந்திரன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, மு. கருணாநிதி ஆகியோர் தோழர் சாமி அவர்கள் பிரிவு குறித்துத் தங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துப் பேசின பின், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், தோழர் சாமி அவர்களின் மறைவால் கழகத்திற்குப் பெரியதோர் நஷ்டம் ஏற்பட்டுள்ளதென்பதைக் குறிப்பிட்டும், சாமி போன்ற எடுத்துக்காட்டு வீரர்களின் கல்லறையிலே இருதுளிக் கண்ணீர் சிந்திவிட்டு மேலும் நமது பயணத்தைத் துவக்கவேண்டுமென்று தோழர்களைக் கேட்டுக்கொண்டும், சாமியின் பிரிவால் திராவிட முன்னேற்றக் கழகமும் குறிப்பாக அண்ணா அவர்களும் தாங்கொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும்போது தி. மு. கழகத்தின் மீது எவ்வளவுயிலும் மாசு கற்பிக்கவேண்டும் என்ற இழிநோக்குடன் மாற்றார் சில செய்து வரும் கடைகெட்ட செயல்களை — ஏனைச் செயல்களைக் கண்டித்தும் உருக்கமிக்கதோர் உரை நிகழ்த்தினர்.

இறுதியில், தலைவர் முடிவுரையுடன் கூட்டம் அமைதியாக கலைந்து சென்றது.

கல்லறைக்குமுன் அண்ணா

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

துரை இருக்கிறேன்—கவலைப்படாமல் மனதைத் தேற்றிக் கொள்ளுங்கள்,"

என்று அண்ணா அவர்கள் அந்தப் பெரியவரிடம் கூறியபோது, கூட இருந்த அத்தனை தோழர்களின் கண்களிலும் கண்ணீர் தளும்பிற்று.

தோழர் சாமி வசித்த வீட்டை விட்டுப் புறப்பட்டு, அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டிருந்த ஆரோக்கியபுரம் கல்லறைக்குச் சென்றனர்.

ஆரோக்கியபுரத்தில் தோழர் சாமி அவர்களின் கல்லறை முன் பாக ஏராளமான தோழர்கள் குழுமியிருந்தனர். கல்லறையை ஒட்டிய தோழர் சாமியின் சிர்வாகத்தில் இயங்கிவந்த வி. வ. டி. பள்ளியின் ஆசிரிய—ஆசிரியைகளும், மற்றும் பள்ளி சிறார்களும் அண்ணா அவர்களிடத்தில் துயர் தோய்ந்த முகத்துடன் வந்துபேசி துயரத்தைப் பகிர்ந்துகொண்டனர்.

வீரர் சாமி அவர்களின் கல்லறைக்கு அண்ணா அவர்கள் மலர் மாலை சூட்டித் தனது இறுதி வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

அதனை அடுத்து, என். வி. நடராசன், எஸ். முத்து, முகவை ஆர். எஸ். பாண்டியன், சென்னை —ராஜா பஸ் சர்வீஸ் உரிமையாளர் டபின்பு கே. தேவராசன், அஞ்சி-பாபு, பொன்னூர்-சுப்பிரமணியம் ஆகியோர மாவீரன் கல்லறைக்கு மலர் மாலை சூட்டித் தங்கள் தங்கள் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டனர்.

அங்கிருந்து, தோழர் சாமி அவர்கள் ... சில மணி நேரத்திற்குள்ளாக அந்தக்குடியின் மற்றொரு பகுதியில் கொலை செய்யப்பட்டு உயிர்துறந்த தோழர் ஆறுமுகம்பிள்ளை (கிராம முன்சீப்) அவர்கள் இல்லத்திற்குச் சென்று அங்கிருந்தோருக்கு ஆறுதல் சொல்லித் தேற்றினார்கள்.

அனுதாபக் கூட்டம்

தூத்துக்குடி வ. உ. சி. திடலில் மாலை 6 மணி அளவில் மாபெரும் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில், தூத்துக்குடி நகர மக்களெல்லாமல், மற்றும் நெல்லை, இராமநாதபுரம், நாஞ்சில் ஆகிய மாவட்டங்களிலிருந்தும் சாரை சாரையாக மக்கள் வந்து குழுமி மறைந்த வீரனுக்குத் தங்களது மரியாதையைத் தெரிவித்துக் கொண்டனர்.

ஒரு இலட்சம் மக்களுக்கும் அதிகமாகக் கூடியிருந்த அனுதாபக் கூட்டத்திற்கு நகரத் தோழர் இராமலிங்கம் அவர்கள் தலைமை வகித்தனர்.

நகர தி. மு. கழகச் செயலாளர் ஜேசுசப், எம். எஸ். சிவசாமி, பொன்னூர்-சுப்பிரமணியம், எஸ் முத்து, என். வி. நடராசன், ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் தங்கள் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டும், மறைந்த வீரனின் சிறப்பியல்புகள் குறித்தும் பேசினர்.

இறுதியாக, கூடியிருந்த தோழர்கள் அனைவருடைய துக்கத்தையும் அன்புத்தையும் பகிர்ந்துகொண்டு அண்ணா அவர்கள், மறைந்த மாவீரனின் புகழ் முயற்சிக்க காம் எந்தப் பணியையும் மேற்கொள்ள வேண்டும் என்பதுபற்றிக் கூறினார்கள்.

துக்கச் சாயல் படிந்த அவருடைய பேச்சிலே ஓரிடத்தில் குறிப்பிட்டார்:—

"நமது தோழர் சாமி அவர்களின் பிரிவால் வாடும் உங்களுக்கு நான் ஆறுதல் சொல்லித் தேற்றிவைத்துப் போக வந்திருக்கிறேன் என்று நீங்கள் எண்ணக் கூடும்; ஆனால் அது என்னால் முடியாத ஒன்று. நான் மிக மிக அதிர்ச்சியடைந்திருக்கிறேன். இந்த இழப்பை எவ்வாறு சரிக்கட்ட முடியும் என்பதைப் பற்றி சிந்திக்கக்கூட முடியவில்லை. நான் உங்களில் ஒருவன்; நீங்கள் தோழரைப் பறிகொடுத்தத் துக்கத்தில் மூழ்கியிருந்தால், நான் தம்பியைப் பறிகொடுத்த தமையனின் பரிதாப நிலையில் இருக்கிறேன். உங்களை நான் தேற்றமுடியும் என்பதைக் காட்டிலும், என்னை நீங்கள் தேற்றுவதைத்தான் நான் எதிர்பார்க்கிறேன் சாமியின் இடத்தை நிரப்ப நீங்கள் எல்லோரும் முயன்று என்னைத் தேற்றுங்கள்"

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் பேசும்போது, சாமியைக் கொலை செய்து மறைந்துவிடும் அளவு வெறிப் போக்குக்கொண்டுவிட்ட இழிமக்கள் யார் என்பதை மக்கள் மன்றத்திற்கு அறிமுகமாக்க எல்லாவிதமான நடவடிக்கைகளையும் போலீஸ் இலாகா மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில் சாமியின் மறைவு குறித்து அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டம் முடிந்ததும், மீண்டும் ஒருமுறை தோழர் கே. வி. கே. சாமி அவர்களின் தந்தையாரைக் கண்டு பேசிவிட்டு அண்ணா அவர்களும் மற்றத் தோழர்களும் இரவு 10 மணி அளவில் தூத்துக்குடி விட்டுப் புறப்பட்டார்கள்.

பொதுச்செ...

இரா. நெடு...யன்

சுற்றுப்ப...

அக்டோபர்

3 : பெரும்பாக்... ஆ.)

4 : வசிட்டபுரம்

நெல்லை மாவ... தோழர்களு...

பொதுத் தேர்தல் குறி... மாவட்டத்தின் சூ... அறியத் தேர்தல் ஆய்... வினர் தங்களின் பயணத் திட்ட... 19-10-56 காலை 9 மணி... திருநெல்வேலிக்கு வரு... இருக்கின்றனர். என... நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரை தேர்தல் நிலை குறித்து விவரம் தெரி...க்கக்கூடிய அந்தந்தத் தொகு...லுள்ள கிளைக் கழகத் தோ...களும் ஆதரவாளர்களு...ம் என்னோடு தொடர்புகொள்ள... வேண்டுகிறேன்.

W. D. துரைசாமி,
துணைச் செயலாளர்,
நெல்லை மாவட்ட தி. மு. கழகம்,
கோவில்பட்டி.

ம. பொ. சி. உள்பட அனைவரும் விடுதலை

சென்னை, அக். 1—

வடக்கெல்லைப் போராட்டத்தில் தடை மீறியதாகக் கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் இன்று விடுதலை செய்யப்பட்டனர்

தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சி. உள்பட 500 தொண்டர்கள் சென்னை மத்திய சிறையிலிருந்து வெளிவந்ததும், பொதுமக்கள் மாலை அணிவித்து மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

அடுத்த நடவடிக்கை விரிவான அளவில் இருக்கும் என்றும் அது மற்றக் கட்சிகளின் ஆதரவையும் பெறக்கூடிய வகையில் அமையலாம் என்றும், இந்த விஷயத்தில் தி. மு. கழகத்தின் பொதுவான அனுதாபம் இருப்பதாகவும் ம. பொ. சி. அவர்கள் பத்திரிகை நிருபர்களிடம் கூறியுள்ளார்.

கழகக் கூட்டம்

சென்னை – கோடம்பாக்கம்

சூளைமேடு (நுங்கம்பாக்கம் இரயில் நிலையம் அருகில்)

2—10—56 மாலை 6 மணிக்கு

தி. மு கழக 3-ம் ஆண்டு நிறைவுவிழா

தலைவர் : கலையழகனார்

பேசுவோர் :

டி. கே. சீனுவாசன்

கோ. செங்குட்டுவன்

சா. வில்லவன்

மனைவியர் ஏர்களில் பூட்டப்பட்டனர்!

மாடுபோல் கணவர்களால் உழப்பட்ட பேதமை

—

...ருண'னின் கோபத்தைத் ...ணிக்க இந்தக் கூத்தாம்!

பதேகார், செப். 27— ...ப்ச மாநிலத்தைச் சேர்ந்த ...ர் மாவட்டத்தில் சென்ற ...வாரங்களாக மழை இல்லை ...லை பொருள்களின் விலை ...கருகிறதாம்! கால் நடை... ...லம்படுகின்றனவாம்!

... வசிக்கும்மக்கள், ...துக் காரணம் ... ... கோபம் கொண் ... தாம் ...ட்டனர்!

... கோபத்தைத் ... மாதர் ... தங்களை பூட்டிக் ... கை... உழும்ப... ...யகின்ற ... சில ...களில், நிர்வாண... பெ... களில் ...லம் ... ஊரார் ...ணீர் செய்கின்ற...ம்.

மழை ...லதற் ... வருணன் என்ம், அ... ...தக்கொண்டிருப்பதாகவும், அந்தக் கோபத்தைத் ...ணியச் செய்தால் மழை பெய்யும் என்றும், அதற்கு இவைதான் உகந்தது என்றும் அந்த மக்கள் ... செயலாற்றியுள்ளனர்!

மக்கள் இப்படியெல்லாம் செய்... ...தும்கூட, இதுவரை மழையே பெய்யவில்லையாம்!

'வலை' வீசியதில் வெற்றி கிடைத்தது!

எதிர்காலத்தில் ...சாவித்... ...தின் அரசியல் நடவடிக்கை... ...ர்மானித்துக்கொண்டு, ...பக்கில்... சேர அகாலிதள சிரமாலி குழு... கூட்டத்தில் முடிவு செய்யப்... ...டிருக்கிறதாம்.

கூட்டத்திற்குத் தலைமை வகித்த மாஸ்டர் தாராசிங் இந்த முடிவை முழுக்க ஆதரித்துள்ளார் ...எனத் தெரிகிறது.

பொதுத் தேர்த...

அதிகாரி தரும் தகவ...

புதுடில்லி, செப் 2...

"நடைபெறவிருக்கும் பொது... தேர்தல் கண்டிப்பாக பிப்ரவ... மார்ச் மாதத்திற்குள் நடந்... திரும்; வாக்காளர் பட்டிய... தயாரிப்பும், தொகுதி கிரண... வேலையும் முடியாததால் தேதி... யைக் குறிப்பிட முடியவில்லை. எல்லா மாநிலங்களிலும் தேர்தல் ஒரே சமயத்தில் நடத்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

"தேர்தலில், ஓட்டுச் சீட்டுகளில் குறி போடும் முறை கையாளப் படமாட்டாது"

என்று தேர்தல் அதிகாரி சுகுமா...சென் கூறியுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்... காக தோழர் இரா. நெடு... செழியன், எம். ஏ. அவர்கள... அழகிரி அச்சகத்தில் அச்சி... பெற்று, (24, சூரியநாராயண... செட்டித் தெரு, இராயபுர... சென்னை) வெளியிடப் பெ... றது. ஆசிரியர் : இரா. நெ... செழியன் எம். ஏ.